285

கட்டிடம் அனுமதி எண். 03 நாள் : 29/06/22

# தண்டலம் ஊராட்சி தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : T.E. சசிமோன்

பொருள் : கட்டிடம் உரிமம் வழங்குதல் - சார்ந்து

பார்வை : திரு. / திருமதி. அவர்களின் மனுநாள் :

திரு / திருமதி ....N. பிரசன்னா....அவர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ....தண்டலம்....ஊராட்சியின் வார்டு எண் : IV சர்வே எண். 308/1 9, 80 இத்துடன் இணைக்கப்பட்டள்ள வரை படத்தின்படி மனைப்பிரிவு / வீடு கட்டிக்கொள்ள / புதுப்பிக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

1. இந்த அனுமதி ....28/06/25....தேதி வரை செல்லத்தக்கதாகும்.
2. இத்துடன் அங்கீகாரம் செய்து அனுப்பப்படவிருக்கும் வரைபடத்தின் கீழ்கண்ட மனைப்பிரிவு/கட்டிடம் கட்ட வேண்டும் மேற்படி வரைபடத்தில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பார்வையிடும்படி தொங்கவிட வேண்டும்.
3. தற்போது கட்டப்போகும் கட்டிடம் / அமைக்கப்படும் வரைபடம் எந்தவிதமான மாறுதலோ இருந்தா அதற்குரிய திருத்தப்பட்ட வரை படங்களுடன் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்ப செய்து உத்தரவு பெற வேண்டும்.
4. கட்டிடம் கட்டும்பொழுது வாசற்பகள் கூரைக் கதவு, கைப்பிடிச் சுவர் சொந்த நிலத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். ஊராட்சி அல்லது சர்க்கார் இடத்திலோ அல்லது தெரு ஓரமாகவோ ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது
5. வரைபடத்தில் குறிப்பிட்டபடி சுகாதாரத் துறையில் சுகாதாரப் பணியாளர்கள் வருவதற்கு வசதியாக கழிப்பிட கட்டிக்கொள்ள வேண்டும்.
6. கழிவு தண்ணீரை பஞ்சாயத்து வடிகால் உள்ள இடங்களில் மேற்படி வடிகாலை விடுவதற்கு வசதியாக தகுந் முறையில் வடிகால் கட்ட வேண்டும்.
7. மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும்.
8. சமையலறை, குளியலறை முதலியவைகளுக்கு புகை போக்குவரத்து வசதியாக சரியாக புகைக்கூண்டு கட் வேண்டும்.
9. மனைப்பிரிவு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு அமைத்தல் வேண்டும்.

10. காற்று வசதிக்கு உண்டான ஜன்னல் வெண்டிலேட்டர் முதலியவைகள் அமைக்க வேண்டும்.

11. சுகாதாரச் சட்டம் 26, 23-வது பிரிவுகளின்படி ஊராட்சி தலைவர் ஆய்வு சம்பந்தப்பட்ட அலுவலரிடம் குடியிருப்புச் சான்று வழங்கிய பின்புதான் வீட்டில் குடியேற வேண்டும்.

12. வேலை முடிந்த 15 தினங்களுக்குள் வேலை முடிந்த விபரத்தை ஊராட்சி சட்டம் 89-வது பிரிவின்படி எழுத்து மூலம் தலைவர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள காலத்திற்குள் வேலை முடியாவிட்டால் உரிய காலத்திற்குள் உரிமம் கட்டணத்தை செலுத்த மனு செய்து உத்தரவு புதுப்பித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு உத்தரவு வாங்கும்வரை யாதொரு விதமான வேலையும் செய்யக் கூடாது.

13. கட்டப்படும் கட்டிடம் தெரு அல்லது சாலையில் இருந்து 5 அடி உட்பக்கம் தள்ளிக் கட்ட வேண்டும்.

14. கட்டிட அனுமதி உரிமம் கட்டணம் ரூ. 45849/-
நாற்பத்தைந்தாயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது மட்டும்

15. மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.

தேதி : 29/06/22 செல்லான் எண் : 15919

-ன் படி வரவு வைக்கப்பட்டுள்ளது.

அடங்கல் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம்.

தலைவர்
தண்டலம் ஊராட்சி
திருப்பெரும்புதூர்.

பெறுநர்

திரு. / திருமதி N. நாராயணன்
[illegible]
[illegible]

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) செங்கல்பட்டு மண்டலம் அவர்களின்
நடவடிக்கைகள்
முன்னிலை: திரு.S.தனராசு. பி.இ.

ந.க.எண்.5144/2012/செம3 நாள். 17 .06.2013.

பொருள் கட்டிடம் - செங்கல்பட்டு மண்டலம் - காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் ஊராட்சி மேவலூர்குப்பம் 'பி' கிராமம் (செட்டிபேடு), சர்வே எண்கள்.308/79, 308/80 -ல் 1647.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனையிடத்தில் ஸ்டில்ட் + 4 தளங்களில் 32 குடியிருப்புகள் கொண்ட உத்தேச குடியிருப்பு கட்டுமான வரைபடங்களுக்கு தொழில் நுட்ப ஒப்புதல் அளித்தல் - குறித்து.

பார்வை

1. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் நக.எண்.27398/2012/பிஏ2, நாள்.07.05.2013
2. மனுதாரர் திரு.N.நாராயணன், சென்னை அவர்களின் கடிதம் நாள்.27.11.2012 மற்றும் 23.04.2013
3. ஊராட்சி மன்றத் தலைவர், தண்டலம் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள். 20.09.2012
4. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.7486/2009/பிஏ2, நாள்.16.04.2009
5. நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.21075/09/பிஏ1 நாள்.04.04.2012
6. அரசாணை நிலை எண்.86, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 28.03.2012
7. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள்.20.05.2013-ல் அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி தேசிய சிறுசேமிப்பு பத்திரம் ஆகியவை செலுத்தக் கோரியது
8. மனுதாரர் திரு.N.நாராயணன், சென்னை அவர்களின் கடிதம் நாள்.07.06.2013 (அடிப்படை உட்கட்டமைப்பு வசதி கட்டணத் தொகை, நன்னிலைவரி மற்றும் தேசிய சிறுசேமிப்பு பத்திரம் செலுத்தியதற்கான விவரம்)

******

<u>உத்தரவு</u>

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், தண்டலம் ஊராட்சி மேவலூர்குப்பம் 'பி' கிராமம் (செட்டிபேடு), சர்வே எண்கள்.308/79, 308/80-ல் 1647.15 சதுர மீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு "ABCDE" என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில் குடியிருப்பு உபயோக கட்டுமானம் கீழ்கண்டவாறு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | -- | 762.64 சதுர மீட்டர் | -- | வாகன நிறுத்துமிடம் |
| முதல் தளம் | -- | 732.57 சதுர மீட்டர் | -- | 8 குடியிருப்புகள் |
| 2-ம் தளம் | -- | 732.57 சதுர மீட்டர் | -- | 8 குடியிருப்புகள் |
| 3-ம் தளம் | -- | 732.57 சதுர மீட்டர் | -- | 8 குடியிருப்புகள் |
| 4-ம் தளம் | -- | 732.57 சதுர மீட்டர் | -- | 8 குடியிருப்புகள் |
| | | மொத்தம் | -- | 32 குடியிருப்புகள் |

மேற்கண்ட உத்தேச 32 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகளுடன், பார்வை 1-ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் முன்னிலை கடிதத்தில் கட்டிட அனுமதி வழங்க கட்டிட வரைபடங்களுக்கு கவ/நஊஇஎண்.112/2013 என எண்ணிட்டு இசைவு அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 6-ல் கண்ட அரசாணையின்படி மனுதாரரிடம் அடிப்படை வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி கட்டணம் மற்றும் நன்னிலைவரி ஆகிய கட்டணங்களை பார்வை 7-ல் கண்ட இவ்வலுவலக கடிதம் மூலம் செலுத்தக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 8-ல் கண்ட மனுதாரரின் கடிதம் மூலம் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய I & A கட்டணம் ரூ.11,02,500/- மற்றும் நன்னிலை வரி ரூ.24,400/- ஆகியன பெறப்பட்டுள்ளதால், மேற்படி உத்தேச மனையிடத்திற்கு "ABCDE" என எல்லையிட்டு, மவ/நஊதுஇ(செம)எண்.114/2013 என எண்ணிடப்பட்டு மனை ஒப்புதலும், அம்மனையில் அமையும் உத்தேச குடியிருப்புகள் கட்டுமான வரைபடங்களுக்கு கவ/நஊதுஇ(செம)எண்.55(ஆ.ஆ)/2013 என எண்ணிட்டு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதி 1997-ன் கீழ் இறுதி ஒப்புதல் வழங்கும் பொருட்டு உள்ளாட்சிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

<u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. Planning permission is issued in accordance with the provisions of the Town and Country Planning Act and the rules made there under and does not cover the structural stability aspects including the safety during the construction which are covered under the Building Rules under the Local Bodies Act. Planning permission is issued subject to the condition that the applicant/developer and also the architects / Licensed Surveyors and the Structural Engineer associated with the development shall ensure that developments shall be structurally sound and adequate safety measures are taken during the process of construction.

<u>நிபந்தனைகள்</u>

1. உத்தேச குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்பாளருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் இதர தேவைக்கான தண்ணீர் வசதி ஆகியவற்றை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தரவேண்டும்
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்
9. அரசாணை எண்.341, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள்.03.11.2004-ன்படி செப்டிக் டேங்க்கில் "U" Trap அமைத்தல் வேண்டும்
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு Fly Ash Bricks and Materials பயன்படுத்தப்பட வேண்டும்
11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்தரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்
13. To obtain consent of TNPCB under water (Prevention & Control of Pollution) Act, 1974 as amended and the Air (Prevention & and Control of Pollution) Act, 1981 as amended.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் இரண்டு தொகுப்புகள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது

மனுதாரர் மேற்கொண்டு ஊராட்சி மன்றத் தலைவர், தண்டலம் ஊராட்சி அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்திரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சான்றினை இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு ஊராட்சி மன்றத் தலைவர், தண்டலம் ஊராட்சி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

17/6/13

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
செங்கல்பட்டு-1

17/6/13

17/6/13

இணைப்பு
ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்கள் - 2 தொகுப்பு

பெறுநர்
ஊராட்சி மன்றத் தலைவர்,
தண்டலம் ஊராட்சி,
திருப்பெரும்புதூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம்

நகல்
திரு.N.நாராயணன்,
எண்.59சி, விநியூ II, வெங்கடேஷ் நகர்,
விருகம்பாக்கம், சென்னை- 92